**கள்ளக்குறிச்சி மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (பொது)**

**அவர்களின் செயல்முறைகள்**

**பிறப்பிப்பவர்:- திரு. டி.சுரேஷ், பி.வி.எஸ்சி & ஏ.எச்.,**

ந.க.அ4/1596/2020. நாள் 24.02.2023

பொருள்: பொதுப்பணி - நேரடி தேர்வு - தமிழ்நாடு அமைச்சுப்பணி - தொகுதி IV - ஒருங்கிணைந்த விழுப்புரம் மாவட்ட வருவாய் அலகில் தேர்வு செய்யப்பட்டது - பணியில் சேர்ந்தது - கள்ளக்குறிச்சி மாவட்ட வருவாய் அலகில் - பணிவரன்முறை செய்து ஆணையிடுதல் - தொடர்பாக.

பார்வை:
1. தமிழ்நாடு அரசுப்பணியாளர் தேர்வாணையம், சென்னை அவர்களின் கடிதம் எண்.969/PSD-C3/2019, நாள்: 16.02.2019.
2. விழுப்புரம் மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (பொது) அவர்களின் செயல்முறை ஆணை ந.க.அ4/4151/2019, நாள்: 25.02.2019.
3. தமிழ்நாடு மாநில அளவிலான ஆய்வுக்குழு -1, ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை, நாமக்கல் கவிஞர் மாளிகை, தலைமைச் செயலகம், சென்னை அவர்களின் Proceedings No. 13004/CV-5/2020-3, dated: 02.12.2022.

*****

**ஆணை:-**

தமிழ்நாடு அரசுப்பணியாளர் தேர்வாணையத்தின் மூலம் நடத்தப்பட்ட போட்டித் தேர்வு - IV-ன் மூலம் தேர்ச்சி பெற்ற பார்வை 1-ல் காணும் கடிதத்தின் வாயிலாக ஒருங்கிணைந்த விழுப்புரம் மாவட்ட வருவாய் அலகில், தமிழ்நாடு அமைச்சுப்பணியில் இளநிலை வருவாய் ஆய்வாளராகப் பணிநியமனம் வழங்கி ஆணையிடப்பட்டதன் பேரில், பார்வை 2-ல் காணும் செயல்முறைகளின்படி பணியிடம் வழங்கி ஆணையிடப்பட்டது.

அதன்படி தனியருக்கு ஒருங்கிணைந்த விழுப்புரம் மாவட்ட வருவாய் அலகில் கீழ்க்கண்டவாறு பணியிடம் வழங்கப்பட்டு, பணியில் சேர்ந்துள்ளார். தனியர் பணியில் சேர்ந்த விபரம் பின்வருமாறு.

| வ. எண். | பெயர் மற்றும் முகவரி | பணியிடம் வழங்கப்பட்ட அலுவலகம் | பணியில் சேர்ந்த நாள். |
|---|---|---|---|
| 1. | திரு. ஆ.தர்மதுரை, எண்.1274, என்.ஏ. அடியனூர் கிராமம், குன்னூர் அஞ்சல், கருமந்துறை வழி, ஆத்தூர் வட்டம், சேலம் மாவட்டம். | இளநிலை வருவாய் ஆய்வாளர், வருவாய் வட்டாட்சியர் அலுவலகம், விழுப்புரம். | 04.03.2019 முற்பகல் |

தனியர் இந்து-மலையாளி வகுப்பை சார்ந்தவர் ஆவார். பார்வை 3-ல் காணும் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை, தலைமைச் செயலகம், சென்னை அவர்களின் கடிதத்தில், இந்து-மலையாளி என ஆத்தூர் வருவாய் கோட்டாட்சியர் வழங்கிய இந்து-மலையாளி (ST) சாதிச் சான்று மெய்த்தன்மை உடையது என தெரிவிக்கப்பட்டுள்ளது.

எனவே, தமிழ்நாடு அரசுப்பணியாளர் தேர்வாணையத்தின் மூலம் ஒருங்கிணைந்த விழுப்புரம் மாவட்ட வருவாய் அலகிற்கு தமிழ்நாடு அமைச்சுப்பணியில், இளநிலை வருவாய் ஆய்வாளராக ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள திரு.ஆ.தர்மதுரை என்பவரின் பணியினை இளநிலை உதவியாளர் நிலையில் பணியில் சேர்ந்த அவருக்கெதிரே உள்ள தேதி முதல் தமிழ்நாடு மாநில மற்றும் சார்நிலைப்பணி விதிகளில் விதி 23(a)-ன்படி வரன்முறை செய்து ஆணையிடப்படுகிறது.

AnyScanner

மேற்கண்டவாறு பணிவரன்முறை செய்யப்பட்ட ஆணையினை சம்பந்தப்பட்டவரின் பணிப்பதிவேட்டில் பதிவு செய்யப்பட்டது.

மாவட்ட ஆட்சியரின்
நேர்முக உதவியாளர் (பொது),
கள்ளக்குறிச்சி.

24/2/2023

**பெறுநர்:**

சம்பந்தப்பட்ட நபர்.

**நகல்:** மாவட்ட ஆட்சித் தலைவர், விழுப்புரம் மாவட்டம் - தகவலுக்காக அனுப்பப்படுகிறது.

**நகல்:** மாவட்ட ஆட்சியர் / மாவட்ட வருவாய் அலுவலர் அவர்களின் நேரடி எழுத்தர்கள், கள்ளக்குறிச்சி.

**நகல்:** அ4-பிரிவு, இருப்பு கோப்பு.